354

OFFICE OF THE REGISTRAR
26 JUL 1916
MADRAS.

உ

சிவமயம்.



நன்னிலந் தாலூகா மாப்பிளை குப்பம்

# அங்காளம்மன்

பதிகமும்

# தாலாட்டும்.

இஃது.

இராமநாதபுரம் ஜில்லா கண்ணங்குடி
தாலூகாவைச் சேர்ந்த முத்துநாட்டிலிருந்த
**யானைக்குருக்கள் குமாரர் ராமுக் குருக்கள்**
அருள்வாக்கினாற் பாடியதை
இராமநாதபுரம் ஜில்லா அமராவதி புதூரிலிருக்கும்
**தா. கணபதி சாமிக்குருக்களால்,**

காரைக்குடி
வைசியமித்திரன் பிரஸ், பிராஞ்சு
க்கூடத்திற் பதிப்பிக்கப் பெற்றது.
**1916.**

Q25:417
N16

உ

சிவமயம்.

1761
894.811
354

OFFICE OF THE REGISTRAR OF ...
28 JUL 1916
MADRAS.



நன்னிலந்தாலூகா மாப்பிளை குப்பம்

# அங்காளம்மன்

## பதிகமும் தாலாட்டும்.

### ஆசிரிய விருத்தம்

பஞ்சாட்சரத்திலே நன்னிலுந்தனில் வளர்
பார்வதி செகசோதி நீ
பரபிர்ம கேசுவரி யோகாசனத்தினி
பாங்கான ஞானரசனி
அஞ்சலென்றடியவர்கள் நெஞ்சகந்தனில்வளர்
தயாபரி செக மோகினி
தயவாக யிருதயமதிலுறவாகி யென்னை ரட்சி
யடாட்சரி அபிராமிநீ

மிஞ்சிவருபூதமும் பிருமராட்சதர்களும்
வீரிடும் பிசாசனங்கள்
மீராது உன்னுடைய பெயர் நாமம் சொன்னவுடன்
மிஞ்சாது வேதாளமும்
அஞ்சலென்றடுமையர்கள் தஞ்சமெ்மன விபூதி
யணிந்திடக்குறைவராது
ஆத்ாரமான பொருள் வேதாந்த ரூபி நீ
அங்காளவல்லி உமையே. 1.

புவனங்களெங்குமுனைப்போற்றுமடியார்கள்
போக்கியே அஞ்செலன்பாய்
பூதல ம்புகழவே மாப்பிளை குப்பம் வளர்
பூவிமீதில் மானிடற்கு
கவனமது துன்பங்கள் வாராமரெட்சி நீ
காவலாய் என்னுளுமே
கனமான பாதமதை தினமாய் நினைந்தவற்கு
கசடேது கவலையேது
தவமது தீரவும் அமுர்த நிலே காணவும
தயாபரியனுக்கிரகம் செய்
தவராமல் பிர்மத்தில் உறவாக நாதமது
தப்பாமலொன்று செய்வாய்
அவதானமான முழு மனதால் வறிந்துருக
லடியேனுக்குதவி செய்வாய்
ஆதாரமானபொருள் வேதாந்த ரூபியே நீ
அங்காளவல்லி உமையே. 2.

வாலை நீபுவனை நீ மாதங்கி ஆதி நீ
வாராயி முக்கண்ணனி நீ
வடிவான திருபுரை நீ மகமாயி காளி நீ
வானவர் துதிப்பவளு நீ
மாலையணி தீபநீ மந்திரம் உபதேசம் நீ
மாணிக்கம் வைடூரியம் நீ
மரகத நாமமுந்திருமேனி பச்சை நீ
மகத்தான கோமளமும் நீ
காலை நீ உச்சி நீ மாலை நீ யிறவு நீ
கஞ்ச மலரணிபவளு நீ

கமல சிம்மாசனீ அகண்டதொரு வெளி ரூபிநீ
அஞ்சலென் வந்தவளு நீ
ஆதார மானபொருள் வேதாந்த ரூபினீ
அங்காள வல்லி உமையே 3.

நவகோண மத்தி சிவநாமம் புகுந்து நீ
நாற்பத்தி முக்கோணம் நீ
ுன்றுன் பீடம் நீஷட் கோணவீடு நீ
நாக சிம்மாசனமு நீ
துவமான காடு நீ உபமான நாடு நீ
தாண்டவ மாடினவள் நீ
தந்தையெனு மொளியு நீ தக்கனுட வேள்வி பின்
தய்யலென வந்தவளு நீ
செபமான மூல நீ திருகோண வாலை நீ
செவிப்பவர் முன் நிற்பவளு நீ
திருவான சோதி நீ அறிவாதம் நாதம் நீ
செயமான வல்லபையு நீ
அபராத ரூபினி தங்காத லீலி நீ
அஞ்சலென வந்தவளும் நீ
ஆதார மானபொருள் வேதாந்த ரூபினீ
அங்காள வல்லி உமையே. 4.

வேதாந்த வித்து நீ வெளியான சுத்து நீ
விமலற் திரு நடனமது நீ
வித்தார மங்கை நீ முத்தான தங்கம் நீ
வேதனரி அரிதாயும் நீ
நாதாந்த ரூபி நீ யேகாந்த சத்தி நீ
நாரணன் சகோதரியு நீ
நற்று வெண் மதியு நீ பத்தருடல் வாழ்கின்ற
நன்ருன பஞ்சவளு நீ
சூதாந்தத் துறவினில் வாதாடு மங்கை நீ
சூட்சமது அறுகுநுணி நீ
சுதான பனிரெண்டு வித்தான கலையில் நால்
சூதாக ஓடாமல் நீ
ஆதாந்த மாகவே நீ தாந்தத்துறவினில்
அகலாம லுண்மைகொள் நீ
ஆதார மானபொருள் வேதாந்த ரூபினீ
அங்காள வல்லி உமையே. 5.

147767
Q25 417 N6

யெந்தனுட யிருதயம் நீ
யெந்தனுட தேகம் நீ யென்னை ரெட்சிப்பவளும் நீ
யெளியேனுக் குதவி நீ குருதந்தை தாயும் நீ
யெந்தனுட குலதெய்வம் நீ
வந்துதவு பாக்கிய நீ தந்த சந்ததமும் நீ
வளர்மாது திருமேவும் நீ
வத்தாத பொய்கை நீ சித்தாதி மூல நீ
வடிவான பொருள் சோதி
சுந்தரி வரமருள் வந்தருள் நீ
அஷ்ட்டாட்சரியும் நீசவுந்தரி சூட்சி
சூரியெனு மாரி நீ காளியெனும் நீலி நீ
சுகந்தாதி அணிபவளும் நீ
அந்தரி புரந்தரி வந்துதன் சுந்தரி
ஆங்காரி ஓங்காரி நீ
ஆதார மானபொருள் வேதாந்த ரூபினீ
அங்காள வல்லி உமையே. 6.

ஊத்தக்குளியில் துற்நாத்த உதிரத்திலு
முண்டான பொய்க்கூடிது
உருவாகியங்கே கருவாகி வந்த
ஊறுன காயமுடையோன்
குத்தப்படைத்துச் சொத்தைக்கொடுத்து
குறியான அமுர்தமறியேன்
கூவென்றபோது வாவென்றழைத்துக்
குறியேது சொல்ல அறியாய்
காத்தைப்பிடித்து பொய்க் கூட்டிலடைத்த
கசடான தேக மூனைநான்
காணவுன் பாதமலர் தோணவும் அருள்செய்வாய்
சாட்சியே சூட்சமிதுவும்
அத்தைத் திருப்பிக் கூத்தனையறுத்து
அணுவான அமுர்தமருள்வாய்
ஆதார மானபொருள் வேதாந்த ரூபினீ
அங்காள வல்லி உமையே 7.

திருவான சோதி நீ அரியாத நீதியே
தெரியாத மூடருனையே
தினமே நினைந்தரிவு மனமே புகுந்த பின்
திகிலான மாவிபயமேன்

கருவான வாசலதில்ப் புகுதாமல் நேசர்கள்
கனியான யமுற்தமருள்வாய்
கலையான ஓடிலதிலுறவாக நாதபாது
மசடேது மற்றிவளியில்
குருவான மூல அறியாருனும்
குடியான தேகமுடையோர்
கூசாமல் வந்து கிராம ஆசானிருந்து வெகு
குடிசாற்க வல்ல உமையே. 8.

அரிதான பாதியதி லுடலே புகுந்ததிரு
அணுவான நீதியம்மே.
ஆதார மானபொருள் வேதாந்த ரூபிணீ
அங்காள வல்லி உமையே. 9.

நாதமதுக் காதார சத்திபாதம் பற்றியே
ராமலிங்கந் தமிழ்க்குகந்து
நன்மையுடனந் திருமேவி லண்மையாக நாதமது
கலைசேர்ந்து நன்றுய்வாழ
பூதமெனும் பஞ்சவரால் தாய்பாதத்தில்
புஷ்பமென மனதர்ச்சனைகள் செய்துகொள்ள
புவிபுகழவந்து தவி சந்தானசெல்வம்
போதமது கல்விதனம் புரிந்து நாளும்
மாதமுமே மும்மாரி மழையுமபேய
மானிடர்களுனைப் புகழ்ந்து வணங்கநாளும்
மகிமைபெற ராஜமுகம் வசியமாகவளர்
மாது திருவளர் மகிட்சியாக
ஆதவனை அணிகின்ற சிவனந்தனபாரி
அம்பிகையே ஈஸ்வரியே தாயே நீயே
ஆதார மானபொருள் வேதாந்த ரூபிணீ
அங்காள வல்லி உமையே. 10.

அங்காளம்மன் பதிகம் முற்றிற்று.

# அங்காளம்மன் தாலாட்டு.

ஐங்கரனைப்போற்றி அரனுடைய தாள்பணிந்து
திங்கள்முகவேலவனைச் சேவித்தடிபணிந்து
மங்களஞ்சேர் ஈஸ்வரியாள் மலர்பதத்தை உட்கொண்டு
செங்கமலவேதனுடதேவி சரஸ்வதியே
வாள்த்தி விடைபெற்ற வாரியமுர்தமுன்று
சேற்குமொரு அக்ஷரத்தால்செப்புகின்றமுப்பொருளும்
தாழ்த்தியது வாராமல் சத்தகமாய் வந்தருளி
சேர்த்துமனமகிழ செய்விப்பாய் அங்கம்மாள். 1.

சாற்றுமொரு புஷ்பமதாய் தாய்பதத்திலென்மனத்தால்
தோத்திரமும்செய்து துதித்துமனமகிழ்ந்தேன்
பார்த்துக்கலிகளெல்லாம் பறந்தோடமானிடற்கு
ஏற்றபடியே யீடேரச்செய்பவள்நீ
தரகனுடவேள்வியதைத் தடுத்துபிரந்துபின்பு
உக்கிரமதாய் வந்துதித்த ஓங்கார அங்கம்மாள். 2.

திக்கெல்லாங்கொண்டாட ஜெயவீரபத்ரனுன்னை
சத்திநீதெய்வமென்று தாழ்பணிந்துமுன்னடக்க
அண்டபுவனமெலாம் அங்கங்கும் நின்றவவளில்
மண்டலங்கள்கொண்டாட மாப்பிளை குப்பமதி
லென்றிசையும்கொண்டாட எங்கள்குலதெய்வமதாய்
நின்றவளைத்தாராட்டி நிச்சித்தெனமுத்திபோ
திருவளருங்காவேரி நதிசெனிக்கவந்தவள்தன்
திருவடியைபோற்றுவற்குதிருவளரச்செய்பவளாம். 3.

தருமுனது கிருபையினுல் சந்தானசம்பத்தும்
வருவ ாவுங்கல்விதன மகத்தான ஞானமுதல்
அங்காளதேவியென்று அன்புவைத்தோராபத்தை
தங்காமலோட்டிவைப்பாய் தாயேபராபரியே. 4.

யெங்கள்குலதெய்வமதா யீஸ்வரியாள்நியிருக்க
வங்காளகொச்சு மலையாளதேசமுதல்
கீர்த்திபெற்றுயெங்குங் கிருபைசெய்யமானிடற்கு
வேரேயொருதெய்வமதை வேண்டுமோ உன்னடிமை
நாத்திசைகொண்டாடவந்த நாயகியே உன்னடிமை
சேர்த்துமனமகிழ செய்விப்பாய் அங்கம்மாள். 5.

உன்னையறியாம லுன்செயலைகாணாமல்
தன்னையறியாமல்பெற்ற தாயென்றுந்தோணாமல்
வீணேதிரிந்தலைந்து மெய்பொய்யும் தானுரைத்து
நானென்றுஆசையினால் நகைத்துமனமகிழ்ந்து
நானென்றுவந்தவரை நாளையிரக்கவிட்டுக்
கோனென்றகூர்த்தனிடங் கூட்டியனுப்பாமல்
தன்னுயிரைப்போலே மன்னுயிருந்தானாக
நின்னபடியே நிறவேற்று அங்கம்மாள். 6.

பிள்ளைக்கவலையினால் பெருந்திர தானடந்து
அள்ளிநிதியை அங்கலகுதானழித்து
தள்ளிநடந்துஸ்தலங்களெல்லாம் போயலைந்து
விள்ளமனதுமேலிவித்து மானிடர்கள்
உள்ளத்தெவைபத்துண்மை உன்மேல்தன்னறிவாய்
வள்ளலெனுநாதமதாய் வாக[illegible]கஉட்கொண்டு
தானாகநின்றுதாய்பதத்தை போற்றுதற்கு
நானெனவேவந்தவற்கு நற்பதமும்நீகொடுத்து
வேணபடிசந்தான சம்பத்துமென்மேலாய்
தோணவேநீகொடுத்துச் சோதியேரட்சியம்மா
சத்திசிவம்ரெண்டுமோராய்த் தானாகநின்றவள்நீ
வெற்றிபெற்றுயெங்கும்மெய்கொண்ட அங்கம்மாள். 7.

பத்திமனங்கொண்டு பராபரியை பூஜித்து
சித்திபெறவேணுமென்று தேவிபதமுன்னிருத்தி
கரதனார்தன்னருளால் காரனியைக்கண்டதினால்
முத்திதரவேணுநீ முக்காலுந்தப்பால்
மனம்போலேவருமென்று மனோன்மணியாள்சொன்னதினால்
யினமேபிரிந்து யிருந்தேநிதுவரையும்
தவசுமுடிந்ததம்மா தாயேயினத்தோடே
கவசமதுசேர்ந்ததுபோல் கன்னிவந்துசேரவைப்பாய்
உன்னடிராமலிங்க முத்தமிளாக்கொத்துமையாய்
மன்னர்மன்னரோடிவந்து வணங்கவைப்பாய் அங்கம்
மாள். 8.

அங்காளம்மன் தாலாட்டு முற்றிற்று.

ஆவணக்காப்பக
147767

9B
2-41